பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்

சமூக நல ஆணையர், சென்னை–15 அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை.திரு.த.ஆபிரகாம், இ.ஆ.ப.,

செ.மு.ந.க. எண்:2999/நிர்4(3)/2020

நாள்: 4.02.2021.

பொருள்:- பணியமைப்பு – சமூக நல ஆணையரகம், சென்னை–15 – பணியில் இருக்கும் போது இறந்த அரசு பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் வழங்கி ஆணையிடுதல் – சார்பு.

பார்வை:-
1.அரசாணை எண்.18, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்.21.02.2006
2.அரசாணை எண்.81, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.10.06.2006
3.அரசாணை எண்.135, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.04.10.2006
4.அரசாணை எண்.42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள். 12.03.2007.
5.தொடர்புடைய ஆவணங்கள்.

-----

ஆணை:

பார்வை 1 முதல் 4 முடிய உள்ள அரசாணைகளின்படியும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான விதிகள் பொது விதி 10(அ)(1)–ன் கீழ் தற்காலிக அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2017ன் படி, Level-8 Revised Pay Range ரூ.19,500 – 62,000/– என்ற ஊதிய விகிதத்தில் கீழ்க்கண்ட நபருக்கு இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கி ஆணையிடலாகிறது.

| வ.எண் | வாரிசுதாரரின் பெயர் (திரு/திருமதி/செல்வி) | பணி வழங்கும் இடம் |
|---|---|---|
| 1 | ஏ.சித்ரா,<br>W/oஎம்.அகிலன்<br>4/103 காந்தி நகர் 6வது தெரு,<br>வடக்கு காட்டூர்,<br>திருச்சி – 620 019 | குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம்,<br>திருவெறும்பூர்,<br>திருச்சி மாவட்டம் |

விதிகளின் படியும் பணியாளரது பணி நியமனத்திற்கென அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு ஆணை வெளியிடலாகிறது.

அன்னார் சிவில் அசிஸ்டெண்ட் சர்ஜன் தகுதிக்கு குறையாத அரசு மருத்துவரிடம் பெறப்பட்ட உடல் தகுதி சான்றிதழுடன் பணியில் சேருமாறு அறிவுறுத்தப்படுகிறார். சம்பந்தப்பட்ட அலுவலர் மேற்படி சான்றினை சரிபார்த்து பணியில் சேர அனுமதிக்க அறிவுறுத்தப்படுகிறார். சம்பந்தப்பட்ட நபர் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேற்காண் அலுவலகத்தில் பணியில் சேருமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

தெரிவு செய்யப்பட்ட நபர் பள்ளி இறுதித்தேர்வில் தமிழை பாடமாகக் கொள்ளாதிருப்பின் அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் ) சட்டம் –2016ல் பிரிவு 21 (2)–இன்படி மற்றும் அரசாணை நிலை எண். 89 பணியாளர் மற்றும் நிர்வாகம் சீர்திருத்தத்துறை நாள்.09.02.1996ன்படி பணி நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஈராண்டுகளுக்குள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறாவிட்டால் பணியிலிருந்து விடுவிக்கப்படுவார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்நியமனம் முற்றிலும் தற்காலிகமானது என்றும், அதில் அன்னார் எந்தவித முன்னுரிமையும் கோர இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அன்னார் இப்பணி நியமனத்திற்கென அளித்துள்ள சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் பொய்யானவை என வருங்காலத்தில் தெரியவரின் எவ்வித முன்னறிவிப்புமின்றி அன்னார் பணியிலிருந்து உடன் நீக்கம் செய்யப்படுவார் என இதன் மூலம் தெரிவிக்கலாகிறது. இந்த பணி நியமனம் அரசாணை மற்றும் அரசின் இசைவு ஆகியவற்றை எதிர் நோக்கி தற்காலிகமாக வழங்கப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட நபர் ஏற்கெனவே வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பின் அவரிடமிருந்து வேலைவாய்ப்பக அட்டையை பெற்று இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

குறைந்தபட்சம் ஓராண்டு காலத்திற்கு எக்காரணத்தைக் கொண்டும் பணியிட மாறுதல் கோரிக்கைகள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இவர் பணி நியமனத்திற்கென பெறப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களைக் கொண்டு கருத்துரு அரசுக்கு அனுப்பி பணிவரன்முறை குறித்து அரசாணை பெறப்பட்ட பின்னரே இவரது பணி வரன்முறை செய்யப்படும் என தெரிவிக்கலாகிறது.

அன்னாரது பணி சேர் அறிக்கையினை உடன் சமூக நல ஆணையரகத்திற்கு அனுப்புமாறு சம்பந்தப்பட்ட அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4/2/2021

சமூக நல ஆணையர்

பெறுநர்

ஏ.சித்ரா,
W/o எம்.அகிலன்
4/103 காந்தி நகர் 6வது தெரு,
வடக்கு காட்டூர்,
திருச்சி – 620 019

நகல்–

1. அரசுச் செயலாளர், சமூக நலம் (ம) சத்துணவு திட்டத்துறை, சென்னை–9.
2. இயக்குநர்/குழும இயக்குநர். ஒகுவதிப., தரமணி, சென்னை –113
3. சம்பந்தப்பட்ட திட்ட அலுவலர் / குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்
4. இருப்புக்கோப்பு / உதிரி